**சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் அக்டோபர் மாதம் (29.10.2021) ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

ஆணையாளர் அவர்களின் 09/2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1234,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 09/2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1235,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

இந்திய தேசிய நெடுஞ்சாலை துறை கடிதம் NHAI/ PIU/ DGL/ DTK/ NH(E) &220./2021/1106 நாள்-07.07.2021 ல் கேட்டுக்கொண்டதன்படி திண்டுக்கல் –தேனி பகுதியில் இருந்து 2+750கீமீ முதல் 73+400 கீமீ மற்றும் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கம் (45) தேனி– குமுளி பகுதி 215+500 கீமீ முதல் 273+600 தேசிய நெடுஞ்சாலை துறை–220 பகுதியில் மேற்படி துறையினாரல் கூடலூர் ஆரம்ப ஜங்சன், கூடலூர் முடியும் பகுதியிலும் மற்றும் லோயர் கேம்ப் பஸ் நிலையம் அருகிலும் உயர்மின் கோபுர விளக்கு அமைப்பதற்கு அனுமதியும் மற்றும் அதற்குறிய மின் கட்டணத்தொகையினை நகராட்சி மூலமாக செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலர் குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**தீர்மான எண்.1236,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

நகர்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் கீழ்,நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருவோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் சான்றிதழ் வழங்குவதற்கான பணி மேற்கொள்வதற்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | விலைப்புள்ளி பெயர் | Rate per Person | GST 18% (9% + 9%) | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | Survey and ID Card Printing | ELITE PEOPLE, சென்னை | 200/- | 36/- | 236/- |
| | | Info Maps, சென்னை | 200/- | 36/- | 236/- |
| | | ATS Multimedia, சென்னை | 200/- | 36/- | 236/- |
| 2. | ID Card Reprinting | ELITE PEOPLE, சென்னை | 115/- | 20.70/- | 135.70/- |
| | | Info Maps, சென்னை | 90/- | 16.20/- | 106.20/- |
| | | ATS Multimedia, சென்னை | 110/- | 19.80/- | 129.80/- |
| 3. | Printing of Vending Certificate | ELITE PEOPLE, சென்னை | 170/- | 30.60/- | 200.60/- |
| | | Info Maps, சென்னை | 165/- | 29.70/- | 194.70/- |
| | | ATS Multimedia, சென்னை | 180/- | 32.40/- | 212.40/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|

அலுவலகக் குறிப்பு:– 1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளி குறைந்த விலைப்புள்ளி வழஙகிய திருவாளர் Info Maps,சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1237,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.5**

உள்ளாட்சித்தேர்தல்-2021, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் ந.க.எண்:தே.பொ.அ1/6669/2021-4, நாள்.23.10.2021-ன்படி கூடலூர் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக வாக்குச்சாவடிகள், AREA MAP,ZONAL MAP, வாக்கு எண்ணும் இடம் மற்றும் வாக்குப்பெட்டி வைக்கும் அறை ஆகியவற்றிற்கான வரைபடம் (AUTO CAD) தயார் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலர் குறிப்பு:-</u>
தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்..

**தீர்மான எண்.1238,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.6**

கூடலூர் நகராட்சியில் உள்ள நுண் உரம் செயலாக்க மையம் (MCC) பொருத்தப்பட்டுள்ள தீயணைப்பு கருவிகளில் பராமரிப்பு பணிகள் செய்திட உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.15,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலர் குறிப்பு:-</u>
மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.1239,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.7**

கூடலூர் நகராட்சியில் மத்திய அரசின் திட்டமான Jal Jeevan Mission (Urban) or AMRUT 2.0ன் கீழ் 2025-2026 வரை தேவையான குடிநீருக்கு நபர் ஒருவருக்கு 135 LPCD வீதம் குடிநீர் வழங்குவதற்கு ஏற்ப கருத்துருக்குள் தயார் செய்திடவும், கூடலூர் நகராட்சி குறித்த ADMINISTRATIVE MAP ,WARD BOUNDRY MAP,WATER SUPPLY,DETAIL MAP,SEWARAGE MAP,WATER BODY MAP மற்றும் 21 WARD MAPS AUTO CAD –ல் வரைந்து A0 அளவு A3 அளவில் மூன்று BOOKLET கள் தயார் செய்வதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.1,90,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலர் குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியியை எதிர் நோக்கி அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி பணியினை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1240,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.8**

கூடலூர் நகராட்சிக்கு புதிய ஆணையாளராக திரு.இரா,சேகர் பி.இ அவர்கள் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.2781/2019/C1–1 நாள்.02.08.2021ன் படி 06.08.2021 நாளன்று நரசிங்கபுரம் நகராட்சியிலிருந்து இந்நகராட்சிக்கு ஆணையாளராக பணி மாறுதலில் பொறுப்பேற்றுள்ளார். மேற்படி ஆணையாளர் திரு.இரா,சேகர் பி.இ அவர்களின் வீட்டு சாமான்களை நரசிங்கபுரத்திலிருந்து கூடலூர்க்கு லாரியின் மூலம் (ஏற்று மற்றும் இறக்கு கூலி உள்பட) எடுத்து வந்தமைக்கான செலவினத்தொகை ரூ.15,350/– ஐ செலவினம் மேற்கொண்ட ஆணையாளர் திரு.இரா,சேகர் பி.இ அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1241,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.9**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையில், திடக்கழிவு மேலாண்மை பணிகள் இயக்குதல், பராமரித்தல், திறம்பட செய்வதற்கு போதுமான பணியாட்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் அமர்த்தி பணிகள் மேற்கொள்வதற்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து பொது வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதன்படி, கூடலூர் நகராட்சிக்கு அளவுகோலின்படி தேவைப்படும் வாகனங்கள் மற்றும் தேவைப்படும் பணியாளர்கள் விபரம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| Sl. No. | Items | Requirement as per norms | Present Strength | Balance needed |
|---|---|---|---|---|
| 1 | **BOV** | 26 | 20 | **6** |
| 2 | **LCV** | 8 | 4 | **4** |
| 3 | **JCB** | 1 | 0 | **1** |
| 4 | **Tractor Pull Dozer** | 1 | 0 | **1** |
| 5 | **Bobcat** | 1 | 0 | **1** |
| 6 | **Cleanliness Worker** | 99 | 53 | **46** |
| 7 | **Driver** | 12 | 2 | **10** |
| 8 | **Supervisor** | 11 | 2 | **9** |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணியாளர்களுக்கு அளவுகோலின்படி செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டி கணக்கீட்டு படிவம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| S. No | Details of the activities | Base data | Sanitary worker | | Driver | | Electrician | | Sanitary supervisor | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Norms | Requirement | Norms | Requirement | Norms | Requirement | Norms | Requirement |
| 1 | Door to Door collection BOV | 12040 | 2 per 400 HH | **36** | - | **0** | - | **0** | - | **0** |
| 2 | Door to Door Collectin LCV | 12040 | 2 per 1200 HH | **8** | 1 | **4** | - | **0** | - | **0** |
| 3 | Door to Door Collection Comericial with LCV | 550 | 2 per 500 C | **1** | 500 | **1** | - | **0** | - | **0** |
| 4 | Door to door Colletion commercial with HCV | 0 | 4 per 1000 C | **0** | 1000 | **0** | - | **0** | - | **0** |
| 5 | Road/ Street sweeping | 21 | 1 | **21** | 0 | **0** | - | **0** | - | **0** |
| 6 | wet wast processing MCC | 3 Nos | 5 | **15** | - | **0** | - | **0** | - | **0** |
| 7 | wet wast processing OCC | 0 | 0 | **0** | - | **0** | - | **0** | - | **0** |
| 8 | wet waste processing Bio Gas Plant | 0 | 2 | **0** | - | **0** | 1 | **0** | - | **0** |
| 9 | Wet waste Processing CPC/windrow/ vermi | 0 | 3 | **0** | - | **0** | - | **0** | - | **0** |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | Dry waste Handling RRC | 2 Nos | 4 | **8** | - | **0** | - | **0** | - | **0** |
| 11 | Market less than one acre | 0 | 0 | **0** | 1 | **0** | - | **0** | - | **0** |
| 12 | Market more than one acre | 0 | 0 | **0** | 1 | **0** | - | **0** | - | **0** |
| 13 | weekly market | 1 | 2 | **2** | 1 | **1** | - | **0** | - | **0** |
| 14 | Bus stand A, B | 0 | 0 | **0** | 1 | **0** | - | **0** | - | **0** |
| 15 | Bus stand C, D | 1 | 4 | **4** | 1 | **1** | - | **0** | - | **0** |
| 16 | Public Toilet | 2 | 2 for 4 toilets | **2** | - | **0** | - | **0** | - | **0** |
| 17 | Park with less than one acre | 0 | 0 | **0** | 0 | **0** | - | **0** | - | **0** |
| 18 | Park with more than one acre | 0 | 2 | **0** | 0 | **0** | - | **0** | - | **0** |
| 19 | Road side greenery and median | 0 | 1 | **0** | 1 | **0** | - | **0** | - | **0** |
| 20 | water bodies vehcile operation | 21 wards | 1/20 wards | **1** | 1/20 wards | **1** | - | **0** | - | **0** |
| 21 | Jungle cleaning vehicle operation | | 0 | **1** | 1 | **1** | - | **0** | - | **0** |
| 22 | Road margin vehicle operation | | 1 | **0** | 1 | **1** | - | **0** | - | **0** |
| 23 | Supervisors | 21 wards | 2 | **0** | - | **0** | - | **0** | 1 Person /2 wards | **11** |
| | **Total manpower** | | | **99** | | **10** | | **0** | | **11** |

| | | |
|---|---|---|
| 1. | தூய்மை பணியாளர் | 46 நபர்கள் |
| 2. | ஓட்டுநர் | 8 நபர்கள் |
| 3. | மேற்பார்வையாளர்கள் | 9 நபர்கள் |

**சுருக்கம்**

| Sl.No | Details | Sanitary Worker | Driver | Electrician | Sanitary Supervisor |
|---|---|---|---|---|---|
| | **Total manpower** | **99** | **8** | **0** | **11** |
| | **Available** | 53 | **2** | **0** | **2** |
| | **Gap** | 46 | **8** | **0** | **9** |
| | **Proposed** | 46 | **8** | **0** | **9** |
| | **Rate** | 461.00 | **708.00** | **0.00** | **562.00** |
| | **Amount in Lakhs** | **76.75** | **20.55** | **0.00** | **18.21** |
| | | | | | |
| | **Total Base Cost - cost in Lakhs** | **115.51** | | | |
| | | | | | |
| | **Total estimated cost including GST, EPF, ESI, EPF admin, EDLI** | **136.89** | | | |

| | and agency charges | | | | |
|---|---|---|---|---|---|

இதன்படி, மேற்படி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 136.89 இலட்சம் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பட்சத்தில் ரூ. 410.67 இலட்சம் செலவினம் ஏற்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் அளவுகோல்கள் நிர்ணயம் செய்து பொது வழிமுறைகள் வழஙகப்பட்டுள்ளதன்படி, கூடலூர் நகராட்சிக்கு தேவைப்படும் தூய்மை பணியாளர்கள்– 46 நபர்கள், ஓட்டுநர்கள் – 8 நபர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் – 9 நபர்கள் ஆகியோர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு, மேற்காணும் கணக்கீட்டின்படி ஆண்டு ஒன்றிற்கு ரூ. 136.89 இலட்சம் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 410.67 இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு..

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மேற்காணும் பட்டியலில் குறிப்பிட்டுள்ள வாகனஙகள் அரசு மானியம் பெற்று கொள்முதல் செய்து கொள்ள பிரேரணை அனுப்பிவைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியார்கள் நியமித்து கொள்ளவும், ஊதிய செலவினங்கள் அரசு மான்யம் பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1242,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.10**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 02.10.2021ம் தேதிய ந.க.எண்.21287/2021/EA2–இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவு கோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| Sl. No. | Designation of the staff / employee | Name of the Activities | | | | | Total staff requirement |
|---|---|---|---|---|---|---|---|
| | | Head works | WT P | Filter bed | OHT / sump | Water tanker | |
| 1 | Electrician Grade I | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| 2 | Maintenance Assistant | 0 | 0 | 0 | 10 | 0 | **10** |
| 3 | Filter bed Operator | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| 4 | Water Testing Assistant | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| 5 | Tanker Cleaner | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| | **Total** | **0** | **0** | **0** | **10** | **0** | **10** |

இதன்படி மேற்காணும் பணியாளர்களை மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் பின்வருமாறு.

| **Sl. No** | **Name of the Post** | **Basic Salary per day per person as per SoR or as approved in Rs.** | **Total salary per day per person ( col No. 3 * 1.4251) Rs.** | **Total salary per month per person** | **Total salary per annum per person Rs .in lakhs** | **No. of person to be engaged** | **Total Budget to be provided per year** | **Total Value to be put in to tender Rs. In lakhs** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | **Rs.** | | | **Rs in Lakhs** | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | Electrician Grade I | 708.00 | 1008.97 | 30269.12 | 3.63 | 0 | 0 | 0 |
| 2 | Maintenance Assistant | 520.65 | 741.98 | 22259.35 | 2.67 | 10 | 26.04 | 20.92 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | Filter bed Operator | 713.70 | 1017.09 | 30512.82 | 3.66 | 0 | 0 | 0 |
| 4 | Water Testing Assistant | 425.00 | 605.67 | 18170.03 | 2.18 | 0 | 0 | 0 |
| 5 | Tanker Cleaner | 396.00 | 564.34 | 16930.19 | 2.03 | 0 | 0 | 0 |
| | | | **Total** | | | **10** | 26.04 | 20.92 |

எனவே, கூடலூர் நகராட்சிக்கு தேவைப்படும் மேற்கண்ட குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான நபர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேச தொகை ரூ.78.12 இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. குடிநீர் பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருதி, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று பணியமர்த்திக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**

**2. மேற்படி செலவினத்தை பொது நிதி அல்லது அரசு மான்யத்தில் ஈடு செய்யலாம்.**

**தீர்மான எண்.1243,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.11**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 02.10.2021ம் தேதிய ந.க.எண்.21287/2021/EA2– இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவு கோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| Sl. No. | Designation of the staff / employee | Total staff requirement |
|---|---|---|
| 1 | Wireman | 1 |
| 2 | Electrical Helper | 1 |
| | **Total** | **2** |

இதன்படி மேற்காணும் பணியாளர்களை மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் பின்வருமாறு.

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approved in Rs. | Total salary per day per person ( col No.3 * 1.4251 ) Rs. | Total salary per month per person Rs. | Total salary per annum per person Rs .in lakhs | No. of person to be engaged | Total Budget to be provided per year Rs in Lakhs | Total Value to be put in to tender Rs. In lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | Wireman | 708.00 | 1008.97 | 30269.12 | 2.55 | 1 | 3.12 | 2.55 |
| 2 | Electrical Helper | 556.00 | 792.36 | 23770.67 | 2.00 | 1 | 2.55 | 2.00 |
| | **Total** | | | | | **2** | **5.67** | **4.55** |

எனவே, கூடலூர் நகராட்சிக்கு தேவைப்படும் மேற்கண்ட தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான நபர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேச தொகை ரூ.17.01 இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.** தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருதி, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று பணியமர்த்திக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை பொது நிதி அல்லது அரசு மான்யத்தில் ஈடு

செய்யலாம்.

**தீர்மான எண்.1244,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.12**

தேனி மாவட்டம் ,உத்தமபாளையம் வட்டம் ,கம்பம் உள்வட்டம், கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, கீழக்கூடலூர் மேற்கு கிராமம் ,சர்வே எண்.1221/1 விஸ்தீரணம் 0.70.50 ஏர்ஸ் “தரிசு” நிலம் என வகைபாடு உள்ள நிலத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் நபர்களுக்கு விலையில்லா வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்காக நகராட்சியின் ஆட்சேபனையில்லா தீர்மானம் நிறைவேற்றி தருமாறு வட்டாட்சியர்,உத்தமபாளையம் அவர்களின் ந.க.எண்.அ5/3604/2021 நாள்.27.10.2021 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் ,முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலர் குறிப்பு:-</u>**

1. கீழக்கூடலூர் மேற்கு கிராமம் ,சர்வே எண்.1221/1 விஸ்தீரணம் 0.70.50 ஏர்ஸ் உள்ள இடமானது புல வரைபடத்துடன் இணைத்து வரப்பெற்ற நிலப்பதிவேட்டில் “தரிசு” என வகைபாடு செய்யப்பட்டுள்ளதானும், மேற்படி இடம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடமாக இல்லாத காரணத்தாலும், மேற்கண்ட இடத்தில் விலையில்லா வீட்டுமனைபட்டா வழங்குவதற்கு நகராட்சியில் ஆட்சேபனை இல்லை என மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1245,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.13**

இந்நகராட்சியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு **39 DBC** களப்பணியாளர்கள் முற்றிலும் தற்காலிகமாக **Out Sourcing முறையில்** தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலியின் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க கொசுப்புழு ஒழிப்புபணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் **CLEAN CARE SERVICE CENTER** மதுரை நிறுவனத்தின் மூலம் தற்சமயம் செயல்பட்டு வருகிறது. இப்ணியானது வருகின்ற 2021 மார்ச் இறுதியில் ஒப்பந்தம் முடிவடையும் நிலையில் உள்ளதால் இப்பணியினை தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற்றால் தான் கொசுபுழுக்களை ஒழித்து டெங்குகாய்ச்சல் பரவாமல் தடுக்க முடியம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/J1, நாள்.17.09.2018, மற்றும் தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ந.க.எண்.14770/202/இ2, நாள்.07.09.2020 உத்திரவில் குறிப்பட்டுள்ள வரிசை எண்.32 இல் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு தினக்கூலியாக ரூ.249/– நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலியின்படி ஏற்கனவே பணியில் உள்ள **37 DBC** களப்பணியாளர்களை மட்டும் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள வேண்டி மேற்கண்ட **CLEAN CARE SERVICE CENTER** மதுரை நிறுவனத்திற்கே வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு. மேற்காணும் களப்பணியாளர்களுக்கு மார்ச்/2021 ஆம் மாதம் களப்பணிகள் செய்ய கால அவகாசம் முடிவடைவதால் மேற்படி நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே ஜீலை/2021 முதல் செப்டம்பர்/2021 முடிய களப்பணி செய்ய மன்ற அனுமதி பெறப்பட்டதால், மேலும் அக்டோபர்/2021 முதல் டிசம்பர்/2021 முடிய மூன்று மாதங்களுக்கு கீழ்கண்டவாறு உள்ளபடி செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**கீழ்க்கண்டவாறு:**

1) தேவைப்படும் களப்பணியாளர்கள்எண்ணிக்கை –37

2) தேனிமாவட்டஆட்சியர் அவர்களின் செயல்முறைஉத்திரவின்படிதினக்கூலியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளநபர் ஒருவருக்குநாள்ஒன்றுக்கு – ரூ.249/–

3) நபர் ஒன்றுக்கு 37DBC களப்பணியாளர்களின் 37X249 தினக்கூலிதொகை ரூ.9213 /–

4) அக்டோபர்/2021 முதல் டிசம்பர்/2021 முடிய மூன்று மாதங்களுக்கு கூலியாக 213X91ரூ.8,38,383/–

5) தொழிலாளர் சேமநலநிதி (13.1 5%) = ரூ1,10,247/–

6) தொழிலாளர் ESI (4.75%) =ரூ.39,823/–

7) தொழிலாளர் LIC (50* 37* 3) = ரூ.5,550/–

–––––––––––

**மொத்தம்** =ரூ.9,94,003/–

கொசுஒழிப்பு பணிக்காக 37 DBC பணியாளர்களுக்கு (அக்டோபர்/2021 முதல் டிசம்பர்/2021 முடிய) மூன்று மாதங்களுக்கு உண்டாகும் உத்தேச செலவீனம் தொகைரூ.9,95,000/– க்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி டெங்கு களப்பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரஅவசர அவசியம் கருதியும் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதியும் பணிகள் மேற்கொள்ளம ன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிகள் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அக்டோபர் /2021 முதல் டிசம்பர்/2021 முடிய மேலும் மூன்று மாதங்களுக்கு களப்பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1246,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.14**

8அரசு ஆணை(நிலை) எண்.168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.16.11.2015 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25480/ஜே3 நாள்.13.06.2016ன்படி துப்புரவு பிரிவு பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் சீருடைகள் வழங்கிட உத்திரவிடப்பட்டதன்படி கூடலூர் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள்,பொது சுகாதார வாகன ஒட்டுநர்கள்,குடிநீர் பிரிவு பணியாளர்கள்,பொறியியல் பிரிவு பணியாளர்கள்,ஈப்பு ஓட்டுநர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோர்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு கீழ்கண்ட அளவுகளில் சீருடைகள் வழங்கவும்,தையற்கூலி வழங்க வேண்டியுள்ளதால் கோ-ஆப் டெக்ஸ் தேனி மூலமாக சீருடைகள் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உண்டாகும் உத்தேச செலவினம் தொகை ரூ.3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளளலாம்.
3. மேற்படி பணிகள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1247,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.15**

இந்நகர்மன்ற தீர்மான எண்.1213, நாள்.31.08.2021–ன்படி இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள 5 வானங்களுக்கு காப்பீடு கட்டணம் செலுத்த உத்தேச செலவினம் ரூ.1,15,000/–க்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கோ–லிமிடெட் கம்பம் நிறுவனத்திற்கு ஏற்கனவே வாகன எண். TN 60 AV 4020 ரூ.23,680/–, TN 60 AV 4052 ரூ.23,680/– மற்றும் TN 60 Y 8120 ரூ.32,224/– ஆகமொத்தம் காப்பீடு கட்டணமாக செலுத்திய ரூ.79,584/–க்கான காசோலை எண்.319924, நாள். 08.02.2021–ன்படி வழங்கப்பட்ட காசோலையின் திருத்தங்கள் காரணமாக வரவெடுக்கப்படாத காரணத்தால் காப்பீடு உரிமத்தினை ரத்து செய்துள்ளதாக மேற்படி நிறுவனம் மூலம் கடிதம் வரப்பெற்றுள்ளது. தற்சமயம் மேற்கண்ட வாகனங்களுக்கு உரிய காப்பீடு கட்டணத்தை தற்போதைய கட்டண விகிதத்தில் செலுத்தவும் மேலும் பொதுசுகாதாரப் பிரிவில் காப்பீடு உரிம காலம் முடிவடைந்த வாகனங்களுக்கும் சேர்த்து கீழ்கண்டவாறு காப்பீட்டு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.

| வ.எண். | வாகன எண்கள் விபரம் | தொகை.ரூ |
|---|---|---|
| 1 | TN 60 AV 4020 | 23,355/– |
| 2 | TN 60 AV 4052 | 23,355/– |
| 3 | TN 60 Y 8120 | 32,086/– |
| 4 | TN 60 T 6093 | 22,159/– |
| 5 | TN 60 AY 4473 | 20,059/– |
| 6 | TN 60 AY 4486 | 20,059/– |
| | மொத்தம் | 1,41,073/– |

மேற்காணும் வாகனங்களுக்கான காப்பீடு கட்டணம் ரூ.1,41,073/–க்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கோ–லிமிடெட் கம்பம் நிறுவனத்தாருக்கு செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1248,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.16**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் ஈச்சர் டிப்பர் லாரி கனரக வாகன எண். TN 60 AY 3850--க்கு காப்பீட்டுக் காலம் 12.11.2021 முதல் புதுப்பிக்க வேண்டி உள்ளது. மேற்படி வாகனத்திற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கோ–லிமிடெட் கம்பம் மூலம் வாகன காப்பீட்டு நிறுவனத்திற்கு காப்பீடு புதுபிப்பு கட்டணம் ஒரு ஆண்டு காலத்திற்கு ரூ.35,658/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொதுசுகாதாரபணியின் அவசர அவசியம் கருதியும், மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1249,அனுமதிக்கப்பட்டது**